IN THE COURT OF JUDICIAL MAGISTRATE ARAKKONAM, RANIPET DISTRICT

PAGE NO.05/2013

DEPOSITION OF WITNESS

(Chapter XXIIII of Criminal Procedure

| | | |
|---|---|---|
| Calender | : | CC.231/2012 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution : PW-12 |

| | | |
|---|---|---|
| Neme | : | திருநாவுக்கரசு |
| Father's Name | : | சின்னசாமி |
| Village | : | காட்டுப்பாக்கம் |
| Taluk | : | அரக்கோணம் |
| Caste | : | - |
| Calling | : | Forest Department |
| Religion | : | Hindu |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 04.02.2021.

மு.வி.சத்தியப்பிரமாணம் தாக்கல் செய்யப்பட்டது.

***ஆஜர் எதிரியை தெரியும் அவர் எங்க ஊர் என்னுடன் படித்தவர் என்னுடைய நண்பர். 31.10.2007 அன்று காலை 7,30 மணி அளிவல் கூலி காட்டுப்பாக்கத்தில் வண்டி ஏறி அனவர்த்திக்கான் பேட்டைக்கு வந்தோம். வரும் வழியில் சம்பவம் நடந்தது. டி.என்.20சி5676 எனடற மேக்சிகேப் வானத்தில் சுமார் 20, 25 பேர் வந்துக்கொண்டு இருந்தோம். அந்த வாகனத்தை எதிரி ஏழுமலை ஓட்டி வந்தார். வண்ணாம்பேட்டை***

என்ற இடத்தில் டிரானிங் திரும்பும்போது வண்டி கட்டுப்பாட்டை இழந்து வலது பக்கத்தில் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்து விட்டது. டிரானிங் என்பதால் வண்டி தடுமாறி கீழே விழுந்து விட்டது. வண்டியின் முன்னாடி கண்ணாடி வழியாக அனைவரும் வெளியே வந்தோம். எனக்கு தலை, கையில் அடிப்பட்டது. என்னுடன் பயணம் செய்தவர்களுக்கும் அடி பட்டது. அதன் பிறகு அரக்கோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அன்றைய தினமே சென்று விட்டேன். மற்றவர்கள் சிலர் சென்னை அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

கு.வி.

சென்னைக்கு செலவதற்கு பொதுவாக காட்டுப்பாக்கத்தில் இருந்து அனவர்த்திக்கான்பேட்டைக்கு சேர் ஆட்டோவில் தான் செல்வோம் என்றால் சரிதான். ஆட்டோவில் செல்லும் அனைவரும் கூட்டமாக அன்றைய தினம் மேக்சிகேப்பில் சென்றோம் என்றால் கூட்டம் அதிகமாக இருந்ததால் மேக்சிகேப்பில் சென்றோம். மேக்சிகேப்பில் அன்றை தினம் கூட்ட நெரிசலாக சென்றோம் என்றால் 20, 25 பேர் சென்றோம். அன்றைய தினம் 50 பேர் சென்றோம் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அனவர்த்திக்கான்பேட்டையில் இருந்து காட்டுப்பாக்கம் வரும் சாலை குண்டும் குழியுமாக உள்ள சாலை என்றால் இல்லை. என்னுடன் வந்த பயணிகள் நீதிமன்றத்தில் அந்த சாலை குண்டும் குழியுமாக உள்ள சாலை என்று பொய்யாக கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த சாலை ஏறிக்கரை என்றால் இல்லை. அந்த வண்டியில் பயணம் செய்த நபர்கள் நீதிமன்றத்தில் விபத்திற்கு முன்பு அந்த சாலையில் மழை பெய்து குண்டும் குழியுமாக இருந்தது என்று பொய்யாக கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வண்டியின் உரிமையாளர் ஏழுமலை இல்லை என்றால் சரிதான். அன்றைய தினம் நான் வேனில் எந்த இடத்தில் உட்கார்ந்து இருந்தேன் என்றால் வேனின் முன் பகுதியில். என்னுடன் யார் யார் அன்றைய தினம் முன் சீட்டில் உட்கார்ந்து இருந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. போலிசார் என்னை எந்த தேதியில் எங்கு விசாரித்தார்கள் என்றால் அரக்கோணம் மருத்துவமனையில் சம்பவத்தன்று விசாரித்தார்கள். இந்தமாதிரியான சம்பவமே நடக்கவில்லை என்றாலும், நான் அந்த

வண்டியில் செல்லவில்லை என்றாலும், எதிரி அந்த வண்டியை ஓட்டவில்லை என்றாலும், நானே இருசக்கர வாகனத்தில் சென்று கீழே விழுந்து விட்டு பொய்யாக புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் அந்த வாகனத்தில் பயணம் செய்யவில்லை என்றாலும், அவ்வாறு சென்று இருந்தால் நான் புகார் அளித்திருப்பேன் என்றாலும் சரியல்ல நான் சென்றேன்.